அரசியல் அதிகார வளர்ச்சி

அலகுபரீட்சை – 03

நா.பிரகாஸ் B.A **வரலாறு** **1 மணித்தியாலம்**

பகுதி-1

1. இலங்கையை ஆண்ட முதல் மன்னனாக கருதப்படுபவன்.

1) விஜயன்
2) 1ம் விஜயபாகு
3) 1ம் பராக்கிரமபாகு
4) தாதுசேனன்

2. புராதன காலத்தில் படகுத்துறையை நிர்வகித்தவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்.

1) கமிக
2) பருமக
3) தொட்டபோஜக
4) தசகம் எத்தன

3. கி.மு 250 ஆம் ஆண்டு கல்வெட்டுகளில் குடும்ப தலைவர் அழைக்கப்பட்ட விதம்.

1) குர்ஹபதி
2) பிரமுக
3) கஹபதி
4) கிராமிக

4. புராதன கிராமம் ஒன்றில் வாழும் ஏழைக் குடியானவன் அடுத்த போகத்தில் தருவதாக கூறிய வாக்குறுதியின் பேரில் கமிகவிடம் நெல் மூட்டைகளை கடனாக பெற்றுக் கொண்டதாக குறிப்பிடப்படும் நூல்.

1) மகாவம்சம்
2) ஜாதக அட்டகதா
3) சத்தர்மாலங்கார
4) சூளவம்சம்

5. இல்லத்தலைவர்களில் இருந்து கமிக தெரிவு செய்யப்படுவதாக கூறும் நூலான சமந்தாபாஷாதிகாவின் ஆசிரியர்.

1) மகாநாம தேரர்
2) தர்மகீர்த்தி தேரர்
3) புத்தகோச தேரர்
4) இராகுல தேரர்

6. கி.மு 700- 450 காலகட்டத்துக்குரிய பிரபுக்கள் பயன்படுத்தியதாக கருதப்படும் கல்லறை மயானம்.

1) உடரஞ்சாமடம்
2) பெரகல
3) இபன்கட்டுவ
4) கல்சொகன்

7. புராதன காலத்தில் குளத்தொகுதிகளை நிர்வகித்தவர்கள் அழைக்கப்பட்ட விதம்.

1) குர்ஹபதி
2) பருமுக
3) கமிக
4) கிராமிக

8. உலர் வலய மக்கள் குளத்தொகுதியை எவ்வாறு அழைத்தனர்.

1) அபரிகித்தகம
2) பரிகித்தகம
3) எல்லங்காவ
4) வெப்பிரபாதனய

www.lkedu.lk

9. பண்டுகாபய மன்னனால் முதலாவது தலைநகரமாக தெரிவுசெய்யப்பட்ட இடம்.

1) பொலனறுவை
2) அனுராதபுரம்
3) கண்டி
4) யாழ்ப்பாணம்

10. இலங்கையில் பௌத்த சமயம் எம் மன்னன் காலம் அறிமுகம் செய்யப்பட்டது.

1) பண்டுகாபயன்
2) தேவநம்பியதீசன்
3) மூடசிவன்
4) துட்டகைமுனு

11. வசப மன்னனின் காலத்தில் யாழ்ப்பாணம் எவ்வாறு அழைக்கப்பட்டதாக வல்லிபுர பொற்சாசனத்தில் குறிப்பிடப்படுகிறது.

1) நுருபுரம்
2) மகாகம
3) நாகதீப
4) பொன்னேரி

12. தேவநம்பியதீச மன்னனின் பின் அரசுரிமை பெற்ற சகோதரர்களுள் ஒருவராக காணப்படாதவர்.

1) மூடசிவன்
2) உத்திய
3) அசேலன்
4) சூரதிஸ்ஸ

13. பின்வரும் நிரல்1 இல் நிர்வாகிகளும் நிரல்2 அவர்கள் அழைக்கப்பட்ட விதமும் தரப்பட்டுள்ளது அவற்றை ஒழுங்குபடுத்தும் போது சரியாக அமையும் விடை

நிரல்1	நிரல்2
1. மகாராஜா	A. ரூப அதெக
2. நகரபரிபாலகர்	B. அஷ அதெக
3. குதிரைப் பிரிவின் தலைவர்	C. மபுறுமுகா
4. காசு அச்சிடும் பிரிவின் தலைவர்	D. நகரகுத்திக

1) ACDB 2)CDBA 3) ABCD 4) BCDA

14. பின்வரும் A-F வரையான கூற்றுக்களை அடிப்படையாக கொண்டு பின்வரும் 17,18 ஆகிய வினாக்களுக்கு விடையை தெரிக.

A- வரலாற்று முதற் குளத்தை அமைத்தல்

B- சோழர் ஆட்சியை முடித்து வைத்தல்

C- பத்தாவது ஆட்சியாண்டில் கிராம எல்லைகளை இடல்.

D- பொலநறுவையை தலைநகராக தெரிவு செய்தல்.

E- யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தல்.

F- பௌத்த சமயம் இலங்கையில் பரப்பப்படல்.

www.lkedu.lk

17. பண்டுகாபய மன்னனுடன் தொடர்புடைய கூற்றுக்களை கொண்ட விடை

1) AC 2) BD 3) CD 4)EF

18. 1ம் விஜயபாகு மன்னனுடன் தொடர்புடைய கூற்றுக்களை கொண்ட விடை

1) AD 2) BD 3) CF 4) DE

19. துட்டகைமுனு மன்னன் காலத்தில் அனுராதபுரம் எல்லாளனிடம் இருந்து மீட்டெடுக்கவும் வெளிநாட்டு வர்த்தகத்தில் பிரசித்தி பெற்ற இடம்

1) ஜம்புகோளப்பட்டினம்
2) கோகன்ன
3) மாந்தை
4) கொடவாய

20. பிரதேச நிர்வாகத்தில் ஈடுபட்ட பெண் அழைக்கப்பட்ட விதம்.

1) பருமகலு
2) தசகம் எத்தன
3) பருமக
4) கமிக

பகுதி - 11

01) i. பின்வரும் வரலாற்றிடங்களை இலங்கைப்படத்தில் குறிக்குக.

அனுராதபுரம் , பொலனறுவை , மாந்தை , நாகதீப , கோகன்ன , குருநாகல் , மகாகம இபன்கட்டுவ , திஸ்ஸமகாராம , சிகிரியா

ii பின்வரும் படங்களை அவதானித்து வினவப்பட்ட வினாக்களின் விடைகளை ஒழுங்கு முறையில் குறிப்பிடுக.

A.



1. அருகில் காணப்படுவது யாது.
2. இது அமைந்துள்ள இடம்.
3. இது எக்கால மக்கள் பயன்படுத்தினர்
4. இதனை பயன்படுத்தியவர்களாக கருதப்பட்டவர்கள்.

B.



1. அருகில் காட்டப்படும் படத்தில் உள்ள மன்னன்.
2. இச்சிலை காணப்படும் விகாரை
3. இம்மன்னன் எந்நாட்டுக்கு தூதுக்குழுக்களை அனுப்பினான்
4. இம் மன்னன் எந்த இராசதானி காலத்துக்கு உரியவன்.

www.lkedu.lk

2. i) பின்வரும் A,B,C என்போர் அழைக்கப்பட்ட விதம்

A-குடும்ப தலைவர்

B- கிராமத் தலைவர்

C-பிரதேச தலைவர்

ii) கமிகவின் கடமைகள் நான்கு குறிப்பிடுக

iii)புராதன காலத்தில் அரசுரிமை வழங்கப்பட்ட முறைகள் இரண்டு குறிப்பிட்டு விளக்குக.

iv)இலங்கை வரலாற்றில் பண்டுகாபயன் பெறும் முக்கியத்துவங்கள் மூன்றை குறிப்பிட்டு விளக்குக

3. i) குளங்கள் அமைக்கப்பட்ட காரணங்கள் மூன்றை குறிப்பிடுக

ii) பின்வரும் A-D வரையான வினாக்களுக்கு அடைப்புக்குறியில் இருந்து தெரிவு செய்க

A- அமைச்சர்
B- உணவுசாலை அதிகாரி
C- வர்த்தக நடவடிக்கை தலைவர்
D- நகர கட்டிட நிர்மானி

iii) பருமகவின் கடமைகள் நான்கை குறிப்பிட்டு விளக்குக.

iv) இலங்கை வரலாற்றில் வசப மன்னனால் மேற்கொண்ட பணிகள் மூன்று குறிப்பிட்டு விளக்குக.

www.lkedu.lk